**NGM COLLEGE (AUTONOMOUS)**
Accredited with A Grade by NAAC
An ISO 9001 : 2000 Certified Institution
**Pollachi - 642 001.** Tamil Nadu.

# Impact of Information Technology on Teaching and Learning Process in Tamil Language

*National Seminar*
*(Sponsored by the UGC)*

# Abstracts

Organised by
**Department of Tamil**

# 9

# தமிழ்மொழி கற்றலில் நவீன தகவல் தொழில்நுட்பவியலின் தாக்கங்கள்

**திரு. சி. ரகுராம்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ், இந்திய மொழிகள்,
கிராமிய கலைகள் புலம்,
கிராமியப் பல்கலைக்கழகம், காந்தி கிராமம்.

ஒரு மொழியைக் கற்றல் என்பது, தனியே வெறும் கற்றலை மட்டுமே அர்த்தப்படுத்தி விடுவதன்று. அது, உணர்வு ரீதியான பங்கேற்புடனேயே சாத்தியமானதாகிறது. இந்த வகையில் தமிழ்மொழியைக் கற்றலில் நவீன தகவல் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ள / ஏற்படுத்திவரும் தாக்கம் - மரபுசார்ந்த வகுப்பறைக் கற்றலிலிருந்தும், இறுக்கமான வரையறைகளிலிருந்தும் மாணவர்களை வெளிக்கொணர்ந்து விடுகிறது. சலிப்பற்ற, சுயமான கற்றலுக்குப் பெருந்துணையாகி - மொழியைக் கிரகிக்கும், பேசும், வாசிக்கும், எழுது திறன்களை விருத்தி செய்வதாகவும் - மொழியின் பண்பாட்டு, மொழியியல் தளங்களை வெகு தளர்வான தன்மையுடன் அறிந்து கொள்ளும் வகையிலும் - நவீன தகவல் தொழில்நுட்பம், மொழிக்கற்றலை இலகுபடுத்தியிருக்கிறது.

மிக விரைவாக, உலகின் எந்த மூலையிலிருந்தும் பல்வேறு மூலங்களையும் உசாவ வழிதரும் இணையவழிக் கற்றல், அதற்குத் துணையாகும் தமிழ் மென்பொருட்கள், தமிழ் மொழியின் முக்கூறுகளான இயல், இசை, நாடகம் ஒருங்கே இணைந்த பல்லூடக வழிக்கற்றல், இலத்திரனியற் தகவற்தொழில் இலத்திரனியல் ஆவணப்படுத்தல்,

தொலைவழியேயும் சமநேரத்தில் கருத்தூடாட்டம் செய்ய வீடியோ மாநாடுகள் எனப் பரந்து, விரிந்து கற்றற் புலத்திற்குள் வியாபித்திருக்கும் - முற்றிலும் புதிய, எழுச்சி நிறைந்த கற்றல் சூழலுக்குள் (Digital Learning Environment) மொழியைக் கற்றல் என்பது, இசைவும் ஆர்வமும் நிறைந்ததொன்றாகி விடுகிறது.

அனைத்துத் தொழில் நுட்பங்களையும் தமிழில் கற்றல் என்ற நிலையிலிருந்து, இன்னமும் வீரியத்துடன், தமிழ் கற்பதற்கு அனைத்துத் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துதல் என்பதை நவீன தகவல் தொழில்நுட்பம் சாதித்திருக்கிறது ; சாத்தியமாக்கியிருக்கிறது.

□□□□□